REGD. NO. M. 6911 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 3உ திங்கள் (19—8—57) ★ ★ வெளியூர்: ஆவணி 4உ செவ்வாய் (20—8—57) [இதழ் 55

உயிர்களையும் உருவாக்க முடியுமாம்!

★

செயற்கை முறையில் உயிர்வர்க்கத்தை உருவாக்க முடியும் என்று சோவியத் விஞ்ஞானியொருவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறர். அலெக்சாண்டர் ஆபரின் என்னும் அந்த விஞ்ஞானி, இதற்குப் பல நாட்டு விஞ்ஞானிகளும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருக்கிறர்.

சோவியத் விஞ்ஞானிகளுக்குப் பல இடையூறுகள் நேர்ந்துள்ளன என்றும், எனினும் இத்துறையில் முயன்று வருவதாகவும் அவர் கூறினர்.

இழைத்துவருகின்ற அநீதிகளுக்கு நியாயம் தேடுகிறர் திட்ட மந்திரி!

அபிவிருத்தி வேலைகளில் பிரதேசங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு ஏன்?

'விசாரணை செய்ய நிபுணர் குழு வேண்டும்'

மக்கள் சபை கோரிக்கையை சர்க்கார் நிராகரித்தது

புதுடில்லி, ஆக. 19—

திட்ட மந்திரி குல்சாரிலால் நந்தா, மக்கள் சபையில், அபிவிருத்தி வேலைகளில் பிரதேசத்திற்குப் பிரதேசம் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை ஒப்புக்கொண்டிருக்கிறர்.

ஆனால், அவை குறித்துக் கண்டறிய ஒரு குழு நியமிக்க வேண்டும் என்ற தனி நபர் தீர்மானத்தை அவர் ஏற்க மறுத்திருக்கிறர்.

"மிக முன்னேறிய பிரதேசங்களோடு இதர பின்தங்கிய பிரதேசங்களையும் சமமாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பிரதேசங்களுக்கிடையே அபிவிருத்தி வேலைகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் பற்றி விசாரணை செய்ய நிபுணர் குழு ஒன்று நியமிக்க வேண்டும்," என்று, ஒரிசாவைச் சேர்ந்த ஒருவர், தீர்மானம் ஒன்று கொண்டு வந்தார்.

இதனை ஆதரித்துப் பேசிய பலரும், பொருளாதார வளர்ச்சி, பிரதேசங்களுக்கிடையில் சமமானவையாக இல்லாவிட்டால், நாட்டின் அரசியல் ஐக்கியமும் உறுதிப்பாடும் நிலைக்காது என்று கூறியிருக்கின்றனர்.

தீர்மானத்தை ஏற்க மறுத்த திட்ட மந்திரி நந்தா, கூறியதாவது:—

"அபிவிருத்தி வேலைகளில் பிரதேசங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனல், திட்டக் குழுவும் மாநில மத்திய சர்க்கார்களும் இந்தப் பிரச்சினையைக் கவனித்து வருகின்றனர் என்பதால், நிபுணர் குழு விசாரணைக்கு அவசியமில்லை.

"இங்கும் அங்குமாக, சில இடங்களைத் தவிர, நாடு முழுவதும் பின்தங்கித்தான் கிடக்கிறது; சில குறிப்பிட்ட பிரதேசங்கள் பல ஆண்டுகளாக அலட்சியப் படுத்தப்பட்டிருக்கும் நிலையை இரண்டு மூன்று ஆண்டுகளில் போக்கிவிட முடியாது.

'நாடுமுழுதும் இன்று அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டிருக்கிறது. அபிவிருத்திக்கான நிதி வழிகள், உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்தும் கிடைக்கும் கடன்களாக இருக்கின்றன. இந்தக் கடன்களுக்கு வட்டி தந்தாக வேண்டும். எனவே, அபிவிருத்தி வேலைகளின் துவக்கக் கட்டத்தில் கிடைக்கக் கூடிய பணத்தை, நல்ல பலன் தரக் கூடிய வகையில்—நாடு முழுதும் பயன்படத் தக்க வகையில் நல்ல திட்டங்களுக்காகவும் தகுந்த பிரதேசங்களிலும் செலவிட்டாக வேண்டும். அப்போதுதான் நாடு வேகமாக முன்னேற முடியும்"

மூன்று வழிகள்!

புதுடில்லி, ஆக. 19—

"மக்கள் குறைகளை அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டுமானல் அதற்கு மூன்றே வழிகள் உண்டு!

தேர்தலில் ஆளும் கட்சியைத் தோல்வியுறச் செய்ய வேண்டும்; அல்லது, பல ஆயிரம் பேர்களை சிறைக்கு அனுப்ப வேண்டும்; அல்லது வெற்றிகரமாக வேலை நிறுத்தம் செய்து காட்ட வேண்டும். அப்போதுதான் அரசாங்கம் மக்கள் குறைகளை உணரும்?"

இவ்வாறு காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரான லாலா அசிந்ராம் என்பார் எடுத்துரைத்துள்ளார்.

பெல்லாரி அருகே துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இருவர் பலி

சுதந்திரப் போர் நூற்றுண்டு விழா ஊர்வலத்தில் சம்பவம்

ஹாஸ்பேட், ஆக. 18—

'சுதந்திரப் போராட்ட நூற்றுண்டு விழா'வையொட்டி நடைபெற்ற ஒரு ஊர்வலத்தைக் கலைப்பதற்காகப் போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்திருக்கின்றனர்; இதன் விளைவாக இருவர் பலியாயினராம்.

ஊர்வலம் ஒரு மசூதி முன் செல்லுகையில் யாரோ சிலர் கற்களை வீசி கலாட்டா செய்தனராம்; இதனல் இரண்டு மூன்று அதிகாரிகள் உட்பட பலருக்குக் காயம்பட்டதாம்.

ஊர்வலம் தன் வழியே சென்று திரும்பி அதே வழியில் வந்தபோது, மீண்டும் குழப்பமும் கலகமும் ஏற்பட்டதாம்; உடனே ஊர்வலத்தைக் கலைப்பதற்காகப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

இதன் விளைவாக இருவர் இறந்தனர் என்று கூறப்படுகிறது.

உயர்தர போலீஸ் அதிகாரிகள் ஸ்தலத்திற்கு விரைந்துள்ளனர் என்றும், நிலைமை அபிவிருத்தி அடைந்துவருவதாகவும் கூறப்படுகிறது.

இந்தியைத் திணிக்க டில்லி சர்க்காரின் தீவிர நடவடிக்கைகள்

1962-ம் ஆண்டிலேயே அலுவல்கள் இந்தியில் நடைபெறுமாம்

மக்கள் சபையில் உள்நாட்டு மந்திரி தகவல்

புதுடில்லி, ஆக. 17—

1965-ம் ஆண்டில்கூட அல்லவாம்—1962-ம் ஆண்டிலேயே சர்க்கார் அலுவல்கள் அனைத்தும் இந்தியிலேயே நடைபெறுவதற்கான வகையில் சர்க்கார் ஊழியர்களுக்கு இந்தி மொழிப் பயிற்சி அளிக்கப் பட்டுவருவதாக டெல்லி மந்திரி பி. என். தத்தார் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறர் எனத் தெரிகிறது.

"இந்தியாவின் சுய மரியாதையைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இந்தி மொழியை 'சமஷ்டி மொழி'யாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தாராம்.

இந்தி மாநிலங்களைச் சேர்ந்த சிலர், உள்நாட்டு மந்திரி சபை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, 'இந்தித் திணிப்பை சர்க்கார் தீவிரப்படுத்தவில்லை' என்று கூக்குரல் எழுப்பினராம்!

இதற்குப் பதிலளிப்பதற்காக, விவாதத்தில் இடைமறித்துப் பேசிய அந்த மந்திரி தத்தார், நாங்கள் இந்தியை ஆட்சி மொழியாக்குவதற்காக இதுவரை மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகளின் விளைவாக, அலுவல்கள் 1962-ம் ஆண்டிலேயேகூட இந்தியிலேயே நடத்தப்பட முடியும்; 1965-ம் ஆண்டில் கட்டாயமாக இந்தியில் அலுவல்கள் நடைபெறும் வண்ணம் ஊழியருக்குப் பயிற்சி அளிக்கப்படுமென்றும் அவர் கூறியிருக்கிறர்.

1965-ம் ஆண்டிற்குப் பிறகும் உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு இப்போதே இந்தி கற்றுத் தரப்பட்டு வருவதாகவும் அவர் கூறியிருக்கிறர்.

தற்காப்பு இலாகாவும், இரயில்வேயினரும் இந்தித் திணிப்பிற்கெனத் தனித்தனித் திட்டங்கள் வைத்து வேலை செய்கின்றன என்றும் அவர் தகவல் தந்திருக்கிறர்.

'எங்கள் பிரச்சினைகளையும் பரிசீலியுங்கள்'

தென் மாநிலங்களான சென்னை, கேரளம், மைசூர், ஆந்திரம் ஆகியவற்றின் கெசட் பதிவு பெறாத அதிகாரிகள், சென்னை அரசாங்கப் பணிமனை (செகரட்டேரியட்) சங்க உறுப்பினர்கள் ஆகியோரின் கூட்டுத் தூதுக்குழுவொன்று, அடுத்தவாரம் டில்லியில் மத்திய அமைச்சர்களைப் பேட்டி காணுமாம்.

இத்தூதுக்குழுவினர் தங்கள் குறைகளை அமைச்சர்களுக்கு எடுத்துரைத்து, தங்கள் கோரிக்கைகளையும் இரண்டாவது சம்பளக் குழு பரிசீலிக்கவிருக்கும் பிரச்சினைகளோடு சேர்த்துக் கொள்ளுமாறு வற்புறுத்துவார்களாம். ஆக. 22-ந் தேதி இக்குழுவினர் சென்னையைவிட்டுப் புறப்படுவர்.

தடையுத்தரவை மீறிய சென்னை எம்.எல்.ஏ. கைது

சென்னை, ஆக. 19—

சென்னைக்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டுமென்றும், மற்றும் பல கோரிக்கைகளுக்காகவும், நடந்துவரும் சோஷலிஸ்டுக் கட்சி அறப்போரை யொட்டி, சென்னை பெரம்பூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் தடையுத்தரவை மீறியதாக தோழர் எஸ். பக்கிரிசாமி பிள்ளை எம். எல். ஏ; அவர்களும், மற்றும் நால்வரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் தலா ரூ. 50 அபராதம் கட்டத் தவறினல் 2 வார சிறைத் தண்டனை விதித்தார்.

தோழர்கள் ஐவரும் அபராதம் செலுத்த மறுத்து சிறைத் தண்டனையை ஏற்றனர் என்று தெரிகிறது.

சிங்கையில் தோழர் அ. பொன்னம்பலனர்

21—7—57 அன்று சிங்கப்பூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நியூ ஓர்ல்ட் தஞ்சோங் பூங்கா நடன அரங்கில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் தோழர் அ. பொன்னம்பலனர் கலந்து கொண்டு சிங்கைவாழ் தமிழ் மக்களுக்குக் கருத்துரை வழங்கும் காட்சி. கூட்டத்தில் 'தமிழ்முரசு' ஆசிரியர் கோ. சாரங்கபாணி, மற்றும் பல பிரமுகர்கள் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—8—57 திங்கள்

ஆணையாளர் அலமரல்

“ காங்கிரஸ் கட்சித் தலைவரும் மேயரும் தந்த உறுதிமொழிகளின் பேரில்தான் நான், இந்த வேலையில் ஈடுபட்டேன். இவர்கள் இருவரும் எனக்குத் தவருன வழி காட்டிவிட்டார்கள். நான் இந்தக் காரியத்தில் ஈடுபட்டது எந்தக் கெட்ட நோக்கத்துடனும் அல்ல; அல்லது சபையின் உரிமைகளை மீற வேண்டும் என்ருே, அல்லது அவமதிக்க வேண்டும் என்ருே நான் கனவிலும் கருதவில்லை. நான் ஒவ்வொரு சின்ன விஷயத்திற்கும் இந்தச் சபையின் யோசனையையும், அனுமதியையும் பெற்று வந்திருப்பதை அறிவீர்கள். இந்த விஷயத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேயரும் என்னைத் தவருன வழியில் ஈடுபடுத்திவிட்டார்கள். எனவே, உறுப்பினர்கள் எனது செயலை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டுகிறேன். நான் இப்போது வலைக்குள் அகப்பட்டுவிட்டதாகக் கருதுகிறேன்; அதனுல்தான், என் நிலையை நான் தெளிவுபடுத்தவேண்டியவனுயிருக்கிறேன்; காங்கிரஸ் கட்சித் தலைவரும் மேயரும் தந்த உறுதிமொழிகளை நம்பி மோசம்போய்விட்டேன் தவறுகள் செய்துவிட்டேன்.”

இவ்வாறு சென்னை நகராட்சி மன்ற ஆணையாளர், ஆட்சி மன்றக் கூட்டத்தில் வெளிப்படையாகக் குறிப்பிட்டிருக்கின்ருர். குறிப்பிட்டிருக்கின்ருர் எனக் கூறுவதைவிட குற்றஞ்சாட்டியிருக்கின்ருர் எனக் கூறுவதே மிகமிகப் பொருத்தமுடையதாகும்.

தாம் யார்மீது குற்றஞ்சாட்டியுள்ளாரோ, அவர்கள் பால் அவர் கொண்டுள்ள நன்மதிப்பும், அதே நேரத்தில் அவர் கொண்டுள்ள அச்சமும் நன்கு வெளிப்படும் வகையில், ஆணையாளர் தமது உள்ளத்தைத் திறந்து பேசி இருக்கின்ருர். ஆணையாளர் வாயிலிருந்து வெளி வந்துள்ள சொற்கள் ஒவ்வொன்றும், அவருடைய இருதயத்தின் அடித்தளத்திலிருந்து வெளி வந்தவைகளாகவே உள்ளன.

‘நான் அவர்கள் உறுதிமொழிகளை நம்பினேன், மோசம் போய்விட்டேன்—தவறுகள் செய்துவிட்டேன்’ என்று ஆணையாளர் குறிப்பிட்டிருப்பது, அவர் பெற்றுள்ள ஏமாற்றத்தின் அளவை மட்டுமல்லாது, அதற்காக அவர் உள்ளம் படும் வேதனையின் அளவையும படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது.

ஆணையாளர் ஏன் இவ்வாறு கண்கலங்க வேண்டும்? துயரந்தோய்ந்த சொல்லம்புகளை ஏன் அவர் ஏவ வேண்டும்? அத்தகு நிலைக்கு ஆணையாளரைத் துரத்தியுள்ள சம்பவம்தான் என்ன?

சேரி சீரமைப்புபற்றி, சென்னை நகராட்சி மன்றம் மேற்கொண்டுவரும் நற்பணிகளை திரைப்படமாக்கும்படி நகராட்சி மன்ற காங்கிரசுக் கட்சித் தலைவராக இருக்கும் எம். இராதாகிருஷ்ணனுர் அவர்கள் ஆணையாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தார். அவரே நகராட்சி மன்ற நிதி—வரி நிரந்தரக் குழுவின் தலைவராகவும் இருந்துவருகிருர். அவ்வறிவிப்புக்கு நகராட்சி மன்றத் தலைவரும் ஒப்புதல் அளித்துள்ளார்.

அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு, நகராட்சி மன்ற ஆணையாளர், திரைப்படம் எடுக்கும் பணியில் ஈடுபடலானுர். இராதகிருஷ்ணனுர் அவர்களின்சிபாரிசின்படி மெஸ்சர்ஸ் மோராக் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு திரைப்படம் எடுக்கும் பொறுப்பை, ஆணையாளர் ஒப்படைத்தார்.

அந்த நிறுவனமும் அடி ஒன்றுக்கு ரூ. 13 விதம் படம் பிடிக்க ஒப்புக்கொண்டது: படம் எடுக்கவும் எடுத்தது.

நிதி—வரி நிரந்தரக் குழுவிற்கு மேற்படி திரைப்படப் பிடிப்பு விவகாரம் கொண்டு வரப்பட்டது. படம் எடுக்கும் செயலை மேற்படி குழு உறுப்பினர்களில் சிலர் தீவிரமாக எதிர்த்தனர். படப் பிடிப்பைக் கைவிடும்படி தீர்மானம் ஒன்றையும் மேற்படி நிரந்தரக் குழு தீர்மானித்தது.

நிதி—வரி நிரந்தரக் குழு மேற்படி படம் எடுக்கும் விவகாரத்தை ஆராய்ந்து முடிவு கட்டவில்லை. அதுபோன்றே படப் பிடிப்பை நகராட்சி மன்ற உறுப்பினர்களும் ஆராய்ந்து ஒப்புதல் அளிக்கவில்லை. இந்த நிலையில் திரைப்படம் பிடிக்கும்படி, நிதி-வரிக் குழுவின் தலைவரும், நகராட்சி மன்ற காங்கிரசு கட்சியின் தலைவருமாக இருக்கிருேம் என்ற நிலையில் சட்டத்தை அலட்சியப்படுத்திவிட்டு, திரைப்படம் எடுக்கும்படி, ஆணையாளரை வற்புறுத்தி இருக்கின்ருர் இராதாகிருஷ்ணனுர் என்பது தெளிவாகின்றது. அத்துடன், படம் பிடிப்பதற்காக தமக்கு அறிமுகமான திரைப்பட நிறுவனம் ஒன்றையும், ஆணையாளருக்கு அந்த கனவான் அறிவித்தும் இருக்கின்ருர்.

நகராட்சி மன்றத்திற்குத் தொடர்புடைய வேறு திரைப்படங்களும் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. அப்படப் பிடிப்புகள் அனைத்தும் அடி ஒன்றுக்கு ரூபாய் 3—8—0 விதம் எடுக்கப்பட்டுள்ளன.

திரைப் படம் எடுக்கப்படுவதற்கு முன்பே, ஒப்பந்தப் புள்ளிகள் கோரவேண்டும் என்பது பொதுவிதி. இதுவரை அதேமுறையைத்தான் நகராட்சி மன்றம் பின்பற்றி வந்திருக்கின்றது. ஆனுல், இந்தப் படப் பிடிப்புக்கு மட்டும் அம்முறைபின்பற்றப்படவேஇல்லை.

இந்தச் சம்பவத்தை நகராட்சி மன்ற உறுப்பினர்களான வி. முனுசாமி அவர்களும், இராசமன்னுர் அவர்களும் சபையில் அம்பலப்படுத்தி உள்ளனர். உண்மை வெளியானதும் ஆணையாளர், தமது தவறு உணர்ந்து தலைப்பில் குறித்துள்ளவாறு குமுறி உள்ளார்.

இந்த அளவோடு நிலைமை முடிவடைந்து விட்டதாக ந

அதிகாரிகளைத் தவருன வழிநடத்தும் காங்கிரஸ் தலைவர்கள் போக்கு

சென்னை நகரசபையில் தோழர் வி. முனுசாமி கண்டன முழக்கம்

சென்னை, ஆக. 14—

நேற்று நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில், நமது கழகத் தோழர் முனுசாமி அவர்கள், நகரசபை மேற்கொண்டுள்ள சேரி அபிவிருத்தி வேலைகளைச் சினிமாப் படம் எடுத்தது பற்றியும், அதற்கு சபையினுடையவும், வரிவிதிப்பு மற்றும் நிதி நிரந்தரக் கமிட்டியினுடையவும் முன் அனுமதி பெருதது பற்றியும் குறிப்பிட்டு, ‘இந்தச் செயல், நகரசபைச் சட்டவிதிகளை மீறுவதாகும்’ என்பதைத் தெளிவுபடுத்தினுர்.

தோழர் முனுசாமி அவர்கள் வெளிக்கொணர்ந்த இந்தத் தகவல்களும், எழுப்பிய குற்றச்சாட்டுகளும், காங்கிரஸ் கட்சியினர், அதிகாரிகளைத் தங்களின் சுயவிருப்பங்களுக்காக எப்படித் தவருன வழிகளுக்கு இழுத்துச் செல்கின்றனர் என்பதைத் தெளிவாக்கியிருக்கின்றன.

தோழர் முனுசாமி அவர்கள் இதுபற்றிக் குறிப்பிட்டதாவது:-

“ நகரசபையின் சேரி அபிவிருத்தி வேலைகளை டாகுமெண்டரி படம் பிடிக்கும் வேலை ஒப்புவிக்கப்பட்டுள்ள கம்பெனிக்கு நகரசபையிலிருந்து அனுப்பப்பட்டுள்ள கடிதத்திலிருந்து இந்தத் திட்டத்திற்கு ரூ. 80,000-வரை செலவாகும் எனத் தெரியவருகிறது; அதாவது, ஒரு அடி சினிமாப் படம் எடுக்க ரூ. 13 என்ற விகிதத்தில் செலவு இருக்கும்.

“ நகரசபை அதிகாரி கமிஷனர், இப்படிப் படம் எடுப்பதற்காக எந்தவிதத் திட்டமும், சபையின் முன்அனுமதியும் இன்றி படம் எடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கிருர்; வரி விதிப்பு, மற்றும் நிதி நிரந்தரக் கமிட்டியின் அனுமதியும் பெறப்படவில்லை. இந்தச செயல், நகரசபைச் சட்டம் மீறப்படுகிறது என்பதைத் தெளிவாக்குகிறது. மேலும், இந்தப் படப்பிடிப்புக்காக ரூ. 5,000 முன்பணம் தந்ததும் சட்ட விரோதமானதாகும். மேலும், இந்தத் திட்டத்திற்காக இதுவரை ரூ. 19,500 செலவிடப்பட்டிருப்பதாகவும் அறிகிறேன்; இதற்கும், முன் அனுமதி எதுவும் பெறப்படவில்லை.

“ இந்த விவகாரம்பற்றிய தஸ்தாவேசுகளிலிருந்து கடந்த எப்ரல் திங்களில், சபையின் காங்கிரஸ் கட்சித் தலைவரான எம். இராதாகிருஷ்ணபிள்ளை அவர்கள்தான், இதுபோல சேரி அபிவிருத்தி வேலைகளைச் சினிமாப் படம்பிடிக்க ஏற்பாடு செய்யுமாறு கமிஷனருக்குக் கடிதம் எழுதினுர் என்று தெரியவருகிறது. இந்தப் படப்பிடிப்பை ஒப்படைக்கப்பட வேண்டிய நிறுவனத்தின் பெயரையும் அவரே எழுதியிருக்கிருர்.

“ இதுபற்றி நகரசபையுடன் கடிதத் தொடர்பு கொண்ட அந்த நிறுவனம், முன்பணமாக ரூ. 5,000 வேண்டுமென மேயருக்கு எழுதிக் கேட்டிருக்கிறது; மேயர், அனுமதியைத் தந்து, காங்கிரஸ் கட்சித் தலைவருக்கு அனுப்பிவைத்தார்; அவரும் தனது அனுமதியைக் கொடுத்து கமிஷனருக்கு அனுப்பினுர்; இதன் பேரில் கமிஷனர், முன்பணத்தைக் கொடுத்திருக்கிருர்.

“ வேடிக்கை என்னவென்ருல், இந்த வேலையை மேற்கொள்ளுவதற்காக ‘டெண்டர்’கள் எதுவும் கோரப்படவில்லை; எவரும், வேலைக்கான செலவு விபரங்களை நகரசபைக்குத் தரவில்லை. இந்த நிறுவனத்தைத் தவிர, வேறெந்த நிறுவனமும் இந்த டாகுமெண்டரி படம் எடுக்கமுடியாதது போலக் கருதி, காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன.

ஒவ்வொரு அடி படத்திற்கும் அந்த நிறுவனம் ரூ. 13 வேண்டுமெனக்கேட்டுப் பெற்றிருக்கிறது. இது எவ்வளவு அதிகமானது என்பதை விசேட கட்டிட வேலை இலாகாவினர் தங்கள் வேலைகளைப் படம் பிடிக்கச் செய்துள்ள செலவுகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இந்த இலாகா ஒவ்வொரு அடி படத்திற்கும் ரூ. 3—8—0-க்கு மேல் செலவிடவில்லை. ‘ஸ்பெஷல் ஒர்க்ஸ்’ இலாகா மூன்றரை ரூபாய்க்கு ஒரு அடி படம் எடுக்க முடிந்திருக்கும்போது, ஒரு தனிப்பட்ட நிறுவனத்திற்கு நகரசபை, இவ்வளவு அதிகமாக—அடிக்கு ரூ. 13 வீதம் செலவிட முடிவு செய்தது எப்படி என்பது எனக்கு விளங்கவில்லை.

“ நகரசபை கமிஷனர், தனது கீழ் உள்ளவர்களால் தவருன வழிக்கு இழுத்துச் செல்லப்பட்டிருக்கிருர் என்றே கருதுகிறேன். இனிமேலாகிலும் கமிஷனர், தனக்கு எவரும் தவருன வழி காட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் ”

காங்கிரஸ் கட்சித் தலைவர் இராதாகிருஷ்ணபிள்ளை கூறியதாவது :—

“ நகரசபையின் சேரி அபிவிருத்தி வேலைகளைப் படம் பிடித்து வெளியிடுவதில் தவறு ஒன்றும் இல்லை என்பது என் சொந்தக் கருத்து; அது ஒரு நல்ல யோசனையாகும் என்றும் கருதுகிறேன். நமது நடவடிக்கைகளைப் பிரபலப்படுத்த அது உதவும். ஆனுல் எனது சொந்தக் கருத்து, நிரந்தரக் கமிட்டியின் அனுமதியாகிவிடாது. இந்த விவகாரம் நிரந்தரக் கமிட்டியின் விவாதத்திற்கு வந்தபோது, நிரந்தரக் கமிட்டி இந்த யோசனையை ஏற்க மறுத்துவிட்டது.”

நிரந்தரக் கமிட்டிக்கு நகரசபை கமிஷனர் ஒரு குறிப்பு அனுப்பியிருந்தார். ஜுலை 26-ந் தேதி வெளியிட்ட அந்தக் குறிப்பு ஜுலை 30-ந் தேதி கூடிய நிரந்தரக் கமிட்டியில் விவாதத்திற்கு வந்தது. அதில், படப்பிடிப்புக்கான கமிட்டியின் அனுமதியைக் கமிஷனர் கோரியிருந்தார்; ஆனுல், அனுமதி பெறு முன்னரே படப் பிடிப்பு வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. எப்ரல் 28-ந் தேதியன்று, சேரி அபிவிருத்தி வேலைகளை மத்திய நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி துவக்கி வைத்த போதே படம் பிடிக்கப்பட்டது.”

இராதாகிருஷ்ணப் பிள்ளை பேசிக் கொண்டிருக்கையில் தோழர் முனுசாமி குறுக்கிட்டுக் கேட்டதாவது :—

“ படப் பிடிப்பு யோசனையை, நகரசபை இலாகாவே கொண்டு வந்ததுபோல இராதாகிருஷ்ணப் பிள்ளை பேசுகிருர்; ஆனுல், தஸ்தாவேசுகள், இராதாகிருஷ்ணப் பிள்ளை தான் முதன்முதலில் இந்த யோசனையை வெளியிட்டவர் என்று கூறுகின்றன.”

உடனே இராதாகிருஷ்ணப் பிள்ளை, ‘ உண்மைதான்; நான் யோசனை கூறினேன். ஆனுல், நிரந்தரக் கமிட்டி உறுப்பினர்கள் இதனை ஆட்சேபித்ததின்பேரில், மேலும் இதற்காகச் செலவிடக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது’ என்று கூறினுர்.

விவாதத்திற்குப் பதிலளித்த, நகரசபை அதிகாரி டி. பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதாவது :—

“ சபையின் உறுப்பினர்களுக்கு மிகுந்த சிரமம் தந்துவிட்டதற்காக மிக வருந்துகிறேன். இந்த விளம்பர வேலைகள் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. ஆனுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும் மேயரும் கூறுகிருர்களே என்பதால்தான், வேலையை மேற்கொண்டேன். நிரந்தரக் கமிட்டி எனது குறிப்பைச் சிபாரிசு செய்ய மறுத்து தீர்மானித்தது கண்டு நான் திடுக்கிட்டேன்; ஆச்சரியப்பட்டேன். ஏனெனில், காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேயரும், நான் இந்த வேலையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று விரும்புவதாகவே நான் கருதினேன்; ஆனுல், அது ஒரு பெரும் தவருகிவிட்டது அவர்கள் எனக்குத் தவருன வழி காட்டிவிட்டார்கள். நான் சபையை அவமதிக்க வேண்டும்—அதன் உரிமைகளை மீற வேண்டும் என்று எண்ணவே இல்லை.

“ சர்க்கார் நிர்ணயம் செய்தது என்று கூறப்பட்டதுல்தான், நான், அடி ஒன்றுக்கு ரூ. 13 என்ற விகிதத்தை ஏற்றுக் கொண்டேன்.

“ நான்தான் இதில் நடவடிக்கை எடுக்க வேண்டியவன் என்ருல், டாகுமெண்டரி படம் எடுக்கவந்த நிறுவனத்தை என்னிடம் அனுப்பியிருக்க வேண்டும், மேயரும், காங்கிரஸ் கட்சித் தலைவரும்! ஆனுல் அவர்கள் செய்யவில்லை ”

உடனே இராஜமன்னுர் எழுந்து ‘இது, கமிஷனருக்கு ஒரு கசப்பான பாடம்’ என்று கூறினுர்.

கமிஷனரும், ‘ஆமாம்; அப்படித்தான்—கசப்பான பாடம் தான்’ என்று ஒப்புக் கொண்டார்.

சபை, கமிஷனர் செய்த செலவை ஏற்றுக்கொண்டு ‘மேற்கொண்டு முன்அனுமதியின்றி, எதுவும் செலவிடக் கூடாது’ என்று கட்டளையிட்டது.

1956-57-ம் ஆண்டில், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இளைஞர்களுக்கான விடுதி எதுவும் ஏற்படுத்தப்படவில்லையென்றும், இதற்கான செலவுகளுக்காக இக்காலத்தில் ரூ. 1 இலட்சம்ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது என்றும் மாநிலங்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

1957-ம் ஆண்டின் 3-சதவிகித வெற்றிக் கடனில், கொடுக்கப்படாமல் பாக்கி நிற்கும் தொகை முழுவதும் 1957 செப். 1-ந் தேதியன்று முழுமையிலும் திருப்பித் தரப்படும்; அந்தத் தேதிக்குப் பின்னர் அதற்கு வட்டித்தொகை எதுவும் சேராது.

தெரிந்து கொள்ளுங்கள்

ராட்சி மன்ற எதிர்க்கட்சிஉறுப்பினர்கள் இருந்து விடக்கூடாது. இது பற்றிய அரசாங்கப் பொது விசாரணைக்கு வழிகாண வேண்டும். சென்னை அரசாங்கமும் இதில் உடனடியாகத் தலையிட்டு ஆவன செய்ய முன்வர வேண்டும்.

இரண்டாவது சம்பளக் கமிஷன்

அடுத்தவாரம் உருவாகும்!

புதுடில்லி, ஆக. 16—

அறிவிக்கப்பட்டுள்ள இரண்டாவது சம்பளக் கமிஷனில் இடம்பெறக்கூடிய உறுப்பினர்கள், மற்றும் கமிஷனின் விசாரணை வரம்பு முதலியவைபற்றி அடுத்த கிழமைதான் அறிவிக்கப்படும் என்று தெரியவருகிறது.

கமிஷனில் ஆறு அல்லது ஏழு உறுப்பினர்கள் இருக்கலாம் என்றும், இவர்கள் யார்யார் என்பது ஆகஸ்டு 18-ந் தேதியன்று நடைபெறும் டெல்லி மந்திரிசபைக் கூட்டத்தில் முடிவாகும் என்றும் கூறப்படுகிறது.

‘கொலை செய்யத் தூண்டியவர்களில் ஆர். எஸ். தங்கப்பழமும் ஒருவன்’

‘முன்னேற்பாடாகத் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டது என்பதில் சந்தேகமில்லை’

கே. வி. கே. சாமி கொலை வழக்கில் தங்கப்பழம், பெருமாள்பற்றி நீதிபதிகள் குறிப்பு

சென்னை, ஆக. 17—

தூத்துக்குடி கே. வி. கே. சாமி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட ஆர். எஸ். தங்கப்பழம், (6-வது எதிரி) எஸ். பெருமாள் (5-வது எதிரி) ஆகியவர்களுக்கு எதிராக மீண்டும் அரசாங்கம் தொடர்ந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் திரு. என். சோமசுந்தரம், திரு. பஷீர் அகமத் சையதும் ஏற்றுக்கொண்டு வழக்கை மறு விசாரணை செய்து, கே. வி. கே. சாமியை கொலை செய்யவேண்டும் என்று இருவரும் திட்டமிட்டனர்’ என்று, இருவருக்கும் ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தனரல்லவா? அந்தத் தீர்ப்பின் சாரம் இங்கு தரப்பட்டுள்ளது:—

“கொலையுண்ட கே. வி. கே. சாமிக்கு ஆர். எஸ். தங்கப்பழமும் எஸ். பெருமாளும் விரோதிகள்—எதிரிகள் என்பதை சாட்சியங்கள் உறுதிப்படுத்துகின்றன.

“கொலை நிகழ்வதற்குச் சற்று முன்னர் இருவரும் இராமசாமி நாய்க்கன் தெருவில் இருந்தனர் என்று ஒரு சாட்சியம் கூறுகிறது. அரசாங்கத்திற்குச் சாதகமாக உண்மையைக் கூறிய ஒரு சாட்சியத்திலிருந்து ‘சாமியை தடுத்துத் தாக்கியவுடன் எதிரிகள் இருவரும் அங்கு வருவதாகக் கூறினர் என்ற உண்மை தெரிய வருகிறது.

“கொலை சம்பவத்தை நேரில் கண்டவர் கூறியதற்கும் சாட்சிகள் கூறியதற்கும் பொருத்தம் இருக்கிறது. கொலையில் ஈடுபட்டவர்களுக்கு இவர்கள் தலைமை வகித்துள்ளனர். கொலை நடைபெற்ற இடத்திலிருந்துகொண்டு இவர்கள், தங்களுடைய ஏவல்களைக் கண்காணித்து இயக்கி வந்துள்ளனர். சாட்சிகள் கூறியதுபோல இவர்கள் அங்கு இருந்திருக்கக் கூடும்; எனவே, இவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் முழுவதும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

“இந்தக் கொலை முன்னேற்பாடாகத் திட்டமிட்டு செய்யப்பட்டது என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. எனவே, இந்தக் கொலையில் ஈடுபட்டவர்களுக்கு இவர்கள் இருவரே முக்கிய பெரிய தலைவர்கள். மற்றவர்கள் இவர்கள் விருப்பப்படி பின் தொடர்ந்தவர்களே. இந்த கொலைக்கு தலைமைவகித்து நடத்தியதற்காக சாதாரணமாக இவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படவேண்டும். ஆனால் இவர்கள் ஏற்கனவே விசாரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருப்பதையும் கவனிக்கவேண்டியுள்ளது. சட்டப்படி தரவேண்டிய அதிகப்படியான தண்டனையை இதன் காரணமாகத் தரமுடியவில்லை. எனவே, இவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறோம்.

“ஆர். எஸ். தங்கப்பழமும், எஸ். பெருமாளும், கொலைச்செயலுக்குத் தலைமைவகித்தவர்கள். அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கும்போது, அவர்களைப் பின்பற்றியவர்களுக்குத் தூக்குத் தண்டனை தரவேண்டியதில்லை. எனவே, நீதியை நிலைநாட்ட அவர்களுக்கும் ஆயுள் தண்டனை தரப்படுகிறது.”

(5-ம் கலத் தொடர்ச்சி)

கூட்டத்திற்கு தோழர் கே.கே. நீலமேகம் தலைமை வகித்தார்.

சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காக திரு. நெடுஞ்செழியன் அவர்களிடம் ரூ. 307-14 புதுக் காசு அளிக்கப்பட்டது.

ஊராண்மைக் கழக வரவேற்பு

அன்று மாலை 5-30 மணியளவில் தாராசுரம் ஊராண்மைக் கழகச் சார்பில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு ஓர் வரவேற்பளிக்கப்பட்டது. ஊராண்மைக் கழகத் துணைத் தலைவர் திரு. எஸ். விசயராகவன் வரவேற்பு மடலை வாசித்தளித்தார்.

மாலை 6-மணிக்கு தாராசுரம் தி. மு. க. சார்பில் நடைபெற இருந்த பொதுக்கூட்டம் மழையின் விளைவாக ஒத்திவைக்கப்பட்டது.

கிராமத்திற்கு போக்குவரத்து வசதி

300 கெச நீளப்பாதை போட்டனர் கழகத் தோழர்கள்

பந்தநல்லூர், ஆக. 12—

குடந்தை வட்டம் பந்தநல்லூருக் கருகில் உள்ள பேழைக்குடி என்ற சிற்றூருக்குப் பாதை வசதியே இல்லாமல் இருந்து வந்தது. அரசாங்க அதிகாரிகளிடம் நீண்ட நாட்களாக விண்ணப்பம் செய்துகொண்டும் பயனேற்படாமல் இருந்தது. பாதை அமைத்துக்கொள்ள அனுமதி பெற காலதாமதமாகியும், அவ்வட்டார தி. மு. க. கிளைக் கழகங்களின் பெரு முயற்சியால் பாதை போட்டு முடிக்கப்பட்டது. மதகுசாலை, முள்ளங்குடி, செருகடம்பூர், நெய்க்குன்னம் முதலான ஊர்களின் கழகச் செயலாளர்கள் ஊக்கத்தின் காரணத்தினால் இந்த 300 கெச நீளபாதை போட்டு முடிக்கப்பட்டது. (ந—நி.)

வேலையிழந்தோருக்கு வேலை தரப்பட்டதாம்!

பல்வேறு இராணுவத் தளவாடத் தொழிற்சாலைகளிலிருந்து ஆள் குறைப்பு செய்யப்பட்ட 5,356 பேர்களிலும், தாமோதர் பள்ளத் தாக்கிலிருந்து ஆள் குறைப்புச் செய்யப்பட்ட 2,808 பேர்களிலும் முறையே 275 பேருக்கும், 187 பேருக்கும் வேலை அளிப்பு உதவி இன்னும் தேவையாக இருக்கிறதாம்!

ஆர். வி. கோபால் மறைவு

நாகை வட்டாரத் திராவிடர் கழகத் தலைவரும், திராவிட விவசாய சங்கத் தலைவரும், நாகை திராவிட நடிகர் கழகத்தின் சார்பாக அறிவுப்பணி ஆற்றியவரும், ராயல் சோடாக் கம்பெனி உரிமையாளரும், பொது வாழ்வுத் துறையில் அயராது பாடுபட்டவருமான தோழர் ஆர். வி. கோபால் அவர்கள் நாகையில் இயற்கை யெய்தினர் என்ற செய்தி நம்மைத் துக்கத்திலாழ்த்தியது.

இந்தப் பேரிழப்பால் வேதனையுறும் தோழர்களுக்கும், குடும்பத்தினருக்கும் அவரது அருமைச் சோதரர் டாக்டர் ஆர். விசயராகவன் அவர்களுக்கும் நமது அனுதாபத்தை உரியதாக்குகிறோம். (ஆ—ர்.)

★

பி.வி. பாலசுப்பிரமணியன் மறைவு

லால்குடி தி. மு. கழகச் செயலாளர் தோழர் பி. வி. பாலசுப்பிரமணியன் அவர்கள் 12—8—57ல் இயற்கை எய்தினர் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். செய்தி கேள்விப்பட்டதும், லால்குடி மற்றும் சுற்று வட்டாரத்திலுள்ள தி. மு. கழகத் தோழர்களும் திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் நேரில் சென்று மலர்மாலைகள் அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினர்.

அவரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினருக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம். (ஆ-ர்.)

★

மறைவு-அனுதாபம்

தஞ்சை மாவட்டத் தி.மு. கழக உறுப்பினரும், மும்முனைப் போராட்டத்தில் சிறை சென்றவருமான தோழர் வலங்கை-தரங்கண்ணன் தனது 27-வது வயதில் இயற்கையெய்தியது குறித்து வலங்கைமான் தி. மு. கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* * *

கள்ளிகுளம் தி. மு. கழகப் பொருளாளரான தோழர் சவரியாபிச்சை தனது 23-வது வயதில் 23—7—57-ல் இயற்கையெய்தியது குறித்து கள்ளிகுளம் தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* * *

ஆலங்கோட்டையில் திரு.வி.க. படிபகத்தைத் தோற்றுவித்தவரும், தி. மு. க. வளர்ச்சிக்கு சிங்கையில் அரும்பாடு பட்டவருமான தோழர் எம். ஆர். மணியம் அவர்கள் 28—7—57ல் இயற்கையெய்தியது குறித்து திரு. வி. க. படிப்படிப்பகம், தி. மு. கழகம் ஆகியவை சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* * *

திருவனந்தபுரத்தில் தி. மு. கழகத்தின் ஆரம்பகால முதற்கொண்டு பொறுப்பாளராக விருந்து தி. மு. க. வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வந்தவரான தோழர் எஸ். சிதம்பரம் 19-7-57ல் இயற்கையெய்தியது குறித்து திருவனந்தபுரம் தி. மு. க. கிளை சார்பில் அனுதாபம் தெரிவிக்கப்படுகிறது.

* * *

வேடசந்தூர், எரியோடு பகுதியில் தி. மு. க. வளர்ச்சிக்கு இடைவிடாது பாடுபட்டுவந்த தோழர் வெல்லம்பட்டி பி. இராமசாமி அவர்கள் இயற்கையெய்தியமைக்கு எரியோடு தி. மு. க. தோழர்கள் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

* * *

சங்கரன்கோவில் தி. மு. க. உறுப்பினர் தோழர் வே. சமுகாசலம் அவர்களின் தாயார் செல்லம்மாள் 9—8—57-ல் இயற்கையெய்தியது குறித்து, நெல்லை மாவட்ட தி. மு. க. சார்பில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

* * *

இராசபாளையம் தி. மு. க. உறுப்பினரும் ஆவரம்பட்டி கே. வி. கே. சாமி படிப்பக உறுப்பினருமான தோழர் அ. சங்கர் இயற்கை யெய்தியமைக்கு ஆவரம்பட்டி கே. வி. கே. சாமி படிப்பகத்தின் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

* * *

குடந்தை நகர தி. மு. க. உறுப்பினரும் துக்காம்பாளையம் நாவலர் படிப்பகத் துணைச் செயலாளருமான தோழர் காந்தி கடந்த 30—6—57-ல் இயற்கையெய்தியது குறித்து கடந்த சவ ஊர்வலத்திலும், அனுதாபக் கூட்டத்திலும், ஏராளமான கழக தோழர்கள் கலந்துகொண்டனர். தோழர்கள் கே. கே. நீலமேகம், வி. சின்னத்தம்பி, பத்மநாபன் ஆகியோர் அனுதாபம் தெரிவித்துப் பேசினர்.

* * *

ஆலந்தூர் தி. மு. க. வளர்ச்சிக்குத் துணைநின்று பணியாற்றும் தோழர் பா. ரா. சம்பந்தம் அவர்களின் தாயார் 14-8-57-ல் இயற்கையெய்தியது குறித்து ஆலந்தூர் தி.மு.க. சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

‘சுதந்திரப் போராட்டமுமல்ல-சிப்பாய்க் கலகமுமல்ல’

‘இந்தியா ஒரே நாடு என்ற எண்ணம்கூட இருந்ததில்லை’

‘இந்தியாவை விடுவிக்கும் நோக்கத்துடன் திட்டமிட்டுச் செய்யப்பட்டதல்ல’

1857 சம்பவம்பற்றி தலைமை நீதிபதி இராசமன்னார்

சென்னை, ஆக. 17—

“1857-ம் ஆண்டு நடைபெற்ற சம்பவங்களை வெள்ளையர் கூறுவதுபோல் ‘சிப்பாய்க் கலகம்’ என்றோ, இப்போது பிரபலப்படுத்துவதைப்போல இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டம் என்று கூறுவதோ உண்மையல்ல! இராணுவக் கலகத்தைவிடவும், பிற்காலத்தில் காந்தியார் தலைமையில் அகிம்சையை அடிப்படையாகக்கொண்டு நடைபெற்ற போராட்டத்தைவிடவும் இது மாறுபட்டதாகும்.

“இந்தியா ஒரே நாடு என்ற எண்ணம், 1857-ல் கலகத்தில் ஈடுபட்ட தலைவர்களுக்கு இருந்ததில்லை. அந்த இயக்கத்தின் தலைவர்கள், அதில் பங்குகொண்டு உயிர்நீத்த உத்தமர்கள், நாட்டின் தலைவர்கள் என்று கூறப்படும் நானா சாகிப், தாந்தியா, தோபே, ஜான்சி இராணி ஆகியோர் தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் வெள்ளையரிடம் குறைகள் கொண்டிருந்தனர்.

“அவர்களுக்கிடையே ஒற்றுமையும்; நல்லுறவும் இருந்ததில்லை என்பதை சரித்திரம் எடுத்துக்காட்டுகிறது. அவர்களுக்கிடையே சிறு மனத்தாங்கலும், பொறாமையும் குடிகொண்டிருந்துள்ளது. சுதந்திரம்பெற அவர்கள் கூட்டாக ஒன்றுபட்டுத் திட்டமிட்டதாக எந்தவிதச் சான்றும் காணப்படவில்லை.

“ஆனால், அந்நியர் ஆதிக்கத்தை அகற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் ஒன்றுசேர்ந்தனர் என்பது மட்டும் தெரியவருகிறது. அதற்குக் காரணம், வெள்ளையர்—முகலாயர் ஆட்சி உட்பட, எல்லா ஆட்சிகளையும் ஆங்கிலேய ஆட்சியுடன் இணைப்பதற்குக் கையாளப்பட்ட கொள்கை பிடிக்காமல் இருந்திருக்கக் கூடும். வெள்ளையாகையாண்ட சில முறைகள் இராணுவத்தினரின் மத நம்பிக்கைக்குத் தீங்கிழைத்ததும் உண்மையே. அதே நேரத்தில், இந்த நாட்டில் அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்து உயிர் நீத்த உத்தமர்களை மதித்து எவருமே வணக்கம் செலுத்துவர்.

“அவர்களுடைய முயற்சி தோல்வியுற்றது, உண்மையில் எனக்குத் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சி தருகிறது; அவர்கள் வெற்றி பெற்றிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அநேகமாக மொகலாய சாம்ராஜ்யத்தின் பேரரசனாக பகதூர் ஷா வந்திருக்கக்கூடும்—உண்மையில் அவ்வாறு கூறப்பட்டும் இருந்தது. ஆனால் சீரும் சிறப்பும் நிறைந்த பழைய மொகலாய சாம்ராஜ்யம் மீண்டும் புதுப்பிக்க முடியாத உண்மையிலே வெளிப்படையாகக் காணப்பட்டது என்பதை மறுக்க முடியாது.

“இந்த நிலையில், மீண்டும் குழப்பமும் சிதைவும் ஏற்பட்டிருக்கும். கருத்து வேற்றுமையின் காரணமாக நாடு சிறு அரசுகளாகப் பிளவுபடுத்தப்பட்டு ஒன்றை ஒன்று பொறாமையுடன் நோக்கி வாழவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். இந்த இயக்கத்தின் தோல்வி, நாட்டுக்கு மறைமுகமாகக் கிடைத்த நன்மை என்றே நான் உண்மையில் நம்புகிறேன்”

—என்று, சென்னை உயர் நீதி மன்ற பிரதம நீதிபதி இராசமன்னார் அவர்கள், இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டத்திற்கு சென்னை கவர்னர் சான் தலைமை வகித்துள்ளார்.

குடந்தை வட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் நிகழ்ச்சிகள்

குடந்தை, ஆக. 15—

9—8—57 மாலை 7-மணிக்கு, கதிராமங்கலம் தி. மு. க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டு, கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

தோழர் சு. பத்மநாபன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். தோழர் கோ. சி. மணியும் பேசினர்.

இரவு 10-மணிக்கு திருநாகேசுவரம் தி. மு. க. சார்பில் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் அவர்கள் இன்றைய அரசியல் நிலையை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

தோழர் எஸ். ஆர். இராதாவும் பேசினர்.

இவ்விரு கூட்டங்களிலும் பொதுச்செயலாளருக்குப் பல கிளைக் கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

சிறப்புக் கூட்டம்

11-8-57 காலை 10-30 மணிக்கு நகர தி.மு.க. சார்பில் குடந்தை மீனாட்சி தியேட்டரில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் சொற்பொழிவாற்றினர்.

(1-ம் கலம் பார்க்க)

தொழிலாளர்கள் வாழ்வதா, சாவதா?

சர்க்கார் நடத்தும் தொழிற்சாலையில் தரப்படும் ஊதியத்தின் இலட்சணம்

நிர்வாகத் துறையிலும் நிலையற்ற போக்கு

ஆவன செய்ய ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும்

டாக்டர் சத்தியவாணிமுத்து எம் எல்.ஏ. **தரும்விளக்கம்**

தொழிலாளர்—தொழிலசம் மானியத்தின் மீது சட்டசபையில் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது :—

"ஆளும் கட்சியிலுள்ளவர்கள் அடிக்கடி பெரம்பூர் தொகுதியிலுள்ள 'மாட்சு பாக்டரி'யைப் பற்றியும், 'கோச் பாக்டரி'யைப் பற்றியும் வயிற்றெரிச்சல் கொண்டிருக்கிறார்கள். உள்ளபடியே 'மாட்சு பாக்டரி'யில் நடப்பதைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். சர்க்காரால் நடத்தப்பட்டுவரும் பாக்டரியில் எவ்விதக் கூலி கொடுக்கப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அப்படி கூலி கொடுப்பதைப் பார்த்தால் உண்மையிலேயே அதை வைத்துக்கொண்டு வாழ்த்தான் முடியுமா என்பதைக் கவனிக்க வேண்டும்.

"அங்கு ஆண்களும் - பெண்களும் வேலை செய்துவருகிறார்கள்; அவர்கள் அங்கு குச்சிகளை அடுக்கி வைக்கிறார்கள்; ஒரு பிரேமில் 50 ஸ்கேல் இருக்கும்; ஒரு ஸ்கேலுக்கு 50 குச்சிகள் என்று அடுக்க வேண்டும்; நாலு மணி நேரத்தில் 2,500 குச்சிகளை அடுக்கினால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி அரையணா; ஒரு குரோசுக்கு 144 குச்சிகள். அவர்களுக்கு ஒரு வேளைக்குக் கூலி 7 அணா கிடைக்க வேண்டுமானால் அவர்கள் 14 குரோஸ் குச்சிகளை அடுக்க வேண்டியதாக இருக்கிறது. இன்னும் அதேபோல், 144 பெட்டிகளுக்கு மேலே 'சில் லேபில்' ஒட்டவேண்டுமானால் அதற்கு அரையணா கூலி கொடுக்கப்படுகிறது. 144 பெட்டிகளை (ஒரு குரோஸ்) ஒரு பெட்டியிலே அடுக்கவேண்டுமானால், அதற்கு ஒரு அணா கூலி கொடுக்கப்படுகிறது. இப்படி எதற்கெடுத்தாலும் அரையணா ஒரு அணா கூலியாகவே நான்குமணிநேரம் வேலை செய்கின்ற—குறிப்பாகப் பெரும்பாலான பெண்களுக்குக் கூலி தந்தால்,நான் இந்த சர்க்காரை வினயத்தோடு கேட்கிறேன்—என் இவர்கள் கள்ளச்சாராயம் காய்ச்ச மாட்டார்கள்—என்று! திருட்டுத்தனமாகத் தொழிலாகப் பயன்படுத்தினால், அவர்களுக்கு ஏராளமான ரூபாய் கிடைக்கிறது. ஆனால், தீக்குச்சித் தொழிலில் கால் கடுக்க — கைநோக — கண் சோர்வடைய வேலை செய்தாலும் கிடைப்பது ஒரு அணா—அரையணா; இதற்குமேலே கூலி உயர்வு இல்லையென்றால், அதிலும் சர்க்காரால் நடத்தப்படுகிற 'மாட்ச் பாக்டரி'யில் இத்தகைய கூலி என்றால், அதைக் குறித்து அனைவரும் பெருமைப்படுகிறார்களே, அவர்களுக்கு நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

"அதேபோல், அடிப்படைச் சம்பளத்தை அந்தத் தொழிலாளர்கள் கேட்டால், உடனே அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இப்பேர்ப்பட்ட முறை அந்த 'மாட்ச் பாக்டரி'யிலே இருப்பது நீக்க வேண்டுமென்று நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

"இன்னும், செருப்புத் தைக்கும் முறையில் 'கவர்ன்மெண்டு புட்—வேர் டிபோ' எனது தொகுதியில் இருக்கிறது. அங்கே ஒரு பெரிய ஜெர்மன் நாட்டின் நிபுணர் இருக்கிறார்; அவருக்கு ரூ. 3,000 சம்பளம்; அழகான கார்; அழகிய பங்களா; ஆனால் அவரால் அந்தத் தொழிற்சாலைக்கு ஏதாவது இலாபமுண்டா; புத்தம் புதிய முறையிலே புதிய செருப்புகள் செய்யக் கற்றுத் தருகிறாரா என்று பார்த்தால், ஒனறுமில்லை. 'அவரால இலாபம் இல்லை' என்று சர்க்காரே ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே வேலையை விட்டு நீக்குவதற்கு முடிகிறது; அப்படிப் பல காரியங்களைச் செய்திருப்பதாக நான் ஆதாரபூர்வமாகக் காட்ட முடியும்.

"ஒரு ஏழைப் பெண்—அவள் பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை — அமைச்சர் விரும்பினால்நாளைக்குகூட இந்த சட்டமன்றத்தின்முன் அழைத்து வர முடியும். ரூ. 5 சம்பளத்தில் 'ஸ்வீப்பர்' வேலை செய்து கொண்டிருந்த அப்பெண்மணியை, சூப்பரிண்டெண்டெண்டாக இருக்கும் ஒரு மலையாளத் தோழர் நீக்கிவிட்டு, அதே வேலைக்கு ஒரு மலையாளப் பெண்மணியை—ரூ. 5. சம்பளம் கொடுத்து வந்ததற்குப் பதிலாக—ரூ. 30 சம்பளம் கொடுத்து, அமர்த்தியிருக்கிறார்; ரூ. 5 ஊதியர் பெற்று வேலை செய்துவந்த அந்த ஏழைப் பெண்ணை அநியாயமாக வீட்டுக்கு அனுப்பிவிட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல; அந்த மலையாள மங்கையின் கணவருக்குக்கூட ஒருநாளைக்கு ரூ. 1—8—0 குறைந்த சம்பளம் கொடுத்து வேலையில்லாமலே சம்பளத்தைக் கொடுக்கின்ற அளவுக்கு சலுகை காட்டி வைத்திருப்பதை ஆதாரபூர்வமாகக் காட்டமுடியும். இதை ஏன் சொல்லுகிறேன் என்று கேட்டால் காரணமில்லாமல் உடனே 'டிஸ்மிஸ்' செய்வதற்கு அந்த அதிகாரிக்கு உத்தரவு இருக்கிறது.

"அதேபோல் திறமையாக வேலை செய்துவந்த ஒருவருக்கு திறமையான Skilled Cobler என்ற முறையில் அவருக்கு உத்தியோக உயர்வு கொடுத்து, இன்றைக்கு அதிலிருந்து மேலும் உயர்வு கொடுத்து 6 மாதம் ஆகிவிட்டது. அந்தஉயர்ந்த பதவிக்கு நிச்சிசத் திறமையாக--பொருத்தமாக வேலை செய்யக்கூடியவர் வேலையில் குற்றங்குறை காண முடியாது என்று சூப்பரிண்டெண்டெண்டு அவர்களே அடிக்கடி பாராட்டி எழுதிவைத்துக் கொண்டிருந்தவர், திடீரென்று அவரை வீட்டுக்கு அனுப்புகிற கிற அளவுக்கு — நினைத்தால், 'வேலையிலிருந்து வெளியே போ' என்று சொல்லக்கூடிய அதிகாரக்குரல் தொனிக்கிறது. இந்த நிலைமை, சர்க்காரால் நடத்தப்படும் செருப்புத் தொழிலகத்திலே இருக்கிறது என்பதை கனம் மந்திரி அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

"சட்டமன்றத் தலைவர் அவர்களே! இப்பேர்ப்பட்ட நிகழ்ச்சிகள் சர்க்காரால் நடத்தப்படும் தொழிலகத்திலே காணப்படுகிறதென்றால், சர்க்கார் தொழிலாளர்களுக்காகவும், தொழில் அபிவிருத்திக்காகவும் பாடுபடுகிறது என்று சொல்வார்களானால், இது உண்மையிலேயே ஒரு காகிதக் கப்பல் என்று சொல்வேன். தொழிலாளர் மக்கள் இந்தக் காகிதக் கப்பலை நம்பி ஏறினால், உள்ளபடியே கரை காணமுடியாத கடலில் மூழ்கிச் சாகவேண்டியதுதான். இப்படிப்பட்ட ஆட்சியிலே நாம் வாழமுடியாது என்று சட்டமன்றத் தலைவர் அவர்களிடம் நான் சொல்ல விரும்புகிறேன்.

"தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் ஆலைகளில்—அதிலும் எல்லாச்சமூகத்தவர்களும் ஒன்றாகச் சேரவேண்டுமென்றும், தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்றும் பேசுகின்ற நேரத்திலேகூட பி. அண்டு சி. ஆலையிலே 1947-ம் ஆண்டிலிருந்து இதுவரை இன்னும் ஆதித்திராவிடர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்படவில்லை என்பதை ஆதாரத்தோடு காட்டமுடியும். 1947-ம் ஆண்டில், பஞ்சாபிகளை நீக்க வேண்டுமென்று வேலைநிறுத்தம் ஏற்பட்ட கலவரத்தினால், ஆதித்திராவிட மக்கள்தான் அதற்குக் காரணம் என்று அனுவசியமாகக் குற்றத்தைச் சாட்டி அந்த நாளிலிருந்து இதுவரை இன்னும் ஆதித்திராவிடர்களை அந்த ஆலையில் வைத்துக் கொள்ளப்படாமல் இருப்பதைநான் ஆதாரபூர்வமாகக் காட்டமுடியும்; 'ரெக்ரூட்டிங்' ஆபீசரிடமுள்ள ரிகார்டிலிருந்து பார்க்கமுடியும்.

"அதுபோல், பி. அண்டு. சி. ஆலையிலும், அதைச் சேர்ந்த நான்கு 'லைன்'களிலும்கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடு கொடுக்காமல் அங்கே அவர்களை ஒதுக்கிவைக்கிறார்கள். கேட்டால், 'எங்களுக்கு வேறு—அவர்களுக்கு வேறு' என்று கூறுகிறார்கள். இன்னும் பி. அண்டு. சி. சார்பாகக் கட்டப்படும் வீட்டுக்கு ரூ. 1—8—0 வாடகை என்றும், செம்பியம், எருக்கஞ்சேரி பகுதிகளில் கட்டியிருக்கும் வீடுகளுக்கு ரூ. 12—8—0 வாடகை என்றும் சொல்லுகிறார்கள். அடிப்படைச் சம்பளம் ரூ. 30 ஆக இருக்கும் போது, எப்படி ரூ. 12—8—0 வீட்டு வாடகை கொடுக்கமுடியும்? எனவே, ஏழைத் தொழிலாளர்களுக்கு ரூ. 12—8—0 வாடகைக்கு பெரிய வீடு கட்டியதன் காரணம் தெரியவில்லை. அந்த வாடகையை அதிகாரிகள் கொடுக்கமுடியுமே தவிர-தொழிலாளர் அல்லாத வேறு பலர் வந்து அங்கு குடியேறமுடியுமே தவிர, தொழிலாளர்கள் அங்கே இடம் பெற முடிவது கிடையாது. இப்பேர்ப்பட்ட காரியங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, உண்மையிலேயே தொழிலாளர் மக்களுக்கு ஏதும் செய்ய சர்க்கார் முன்வராதிருப்பது கண்டு நான் வருந்துகிறேன்; செய்கின்ற முறை சரியான முறையல்ல என்று கூறுகிறேன்.

"அதுபோல், தோல்பதனிடும் தொழிலானது தமிழ் நாட்டிலே மிக வளர்ச்சியான தொழில் என்று நமது அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார். இப்பேர்ப்பட்ட தொழிலில் பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடுபட்டிருக்கிற காரணத்தாலும், இந்தத் தொழில் இன்னும் தனிப்பட்ட முதலாளிகளின் கையிலே இருப்பதாலும்,யாதொரு சலுகையும் கொடுக்கப்படவில்லை என்று வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்"

பண்டா ஒப்பந்தத்தை மீறினரா?

வெளியிடப்படும் மசோதா நிலையை தெளிவாக்கும்

பிரதமர்—தமிழரசுக் கட்சித் தலைவர் கூட்டறிக்கை

கொழும்பு, ஆக 16—

இலங்கை சர்க்காருக்கும்—தமிழரசுக் கட்சியினருக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் முறிந்துவிட்டதாக எழுந்துள்ள சந்தேகம் சரியானதல்ல என்றும், ஒப்பந்தத்தின் அடிப்படையில் தயாராகிவரும் மசோதா வெளியிடப்பட்டதும் நிலை தெளிவாக்கப்படும் என்றும் அதற்கிடையில் எவரும் உணர்ச்சிகளைத் தூண்ட வேண்டாம் என்றும் பிரதமர் பண்டாரநாயகாவும்—தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகமும் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளனர்.

கழகக் கூட்டங்கள்

★

சத்தியமங்கலம்:

தி. மு. கழகத் துவக்கவிழா

20—8—57 மாலை 6½ மணிக்கு

தலைவர் : ஜி. எஸ். நடேசன்

பேசுவோர் :

ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

ஆர். சம்பங்கி

★

ஆலந்தூர் :

தி. மு. க. ஆண்டு விழா

தர்மராசா கோயில் எதிரில்

20—8—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : ஆ.வே.ரா. கிருட்டினன்

பேசுவோர் :

கண்ணதாசன்

எஸ். எஸ். தென்னரசு

புகழேந்தி

தமிழ்ப்பித்தன்

கே. எஸ். புகாரி

★

காட்டுப்பாக்கம் :

20—8—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : எம். அரங்கநாதன்

பேசுவோர் :

இரா. நெடுஞ்செழியன்

சி. வி. எம். அண்ணமலை

பி. சின்னசாமி

டேப்—இராதாமாணிக்கம் இன்னிசை உண்டு.

பேராசிரியர்

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஆக. 19 : ஒண்டிப்புதூர் (கோவை)

21 : காலை—சிதம்பரம் திருமணம்

மாலை—சீர்காழி பொதுக்கூட்டம்

சத்தியவாணிமுத்து

எம்.எல்.ஏ., சுற்றுப்பயணம்

ஆக. 20 : கணியூர்

22 : தாராபுரம்

25 : பண்ணுருட்டி

பீடித் தொழிலாளர் அறப்போர்

சேலம், ஆக. 18—

நான்காவது நாளாக சேலம் மாவட்ட கலெக்டர் காரியாலயத்தின் முன்பு மறியல் செய்த 8 குழுக்களைச் சேர்ந்த மொத்தம் 103 பீடித் தொழிலாளர்களை 17-ந் தேதி மாலைவரை சேலம் போலீசார் கைது செய்தனர். அவர்களை 10 நாட்கள் முதல் 15 நாட்கள்வரை காவலில் (ரிமாண்டில்) வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். சேலம் சப்-ஜெயிலில் இட நெருக்கடி ஏற்பட்டதால் கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலோர் சேலம் மத்திய சிறைக்கு கொண்டு போகப்பட்டனர். 17-ந் தேதி வரை மொத்தம் 233 பீடித் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந—கி.)

★★★★★★★★★★★★★★★★★

கு. ஆனைமுத்து--இந்திரா

திருமணம்

21—8—57 காலை 7-30 மணிக்கு, கடமங்குடியில் கு. ஆனைமுத்து — இந்திரா திருமணம், தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெறும். **அண்ணு** அவர்களும், தோழர் பொ. தருமன் அவர்களும் வாழ்த்துரை வழங்குவர்.

★★★★★★★★★★★★★★★★★

மக்கள் முன்னேற்ற மன்றம்

இதுவரை சென்னை—இராயபுரம், மார்க்கெட் சந்து, எண் 21-ல் இயங்கிவந்த 'மக்கள் முன்னேற்ற மன்றம்' தற்போழுது இராயபுரம், தம்பு செட்டி சந்து எண் 51-க்கு மாற்றப்பட்டுள்ளது.

காங்கிரஸ் ஆட்சியில் !

மாணவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம்

ஜெய்ப்பூர், ஆக. 19—

இங்கு, மாணவர்களிடம் கல்விக்காக இதுவரை வசூலிக்கப்பட்ட கட்டணத்தை இந்தஆண்டு உயர்த்திவிட்டுள்ளனர்; நாட்டில் நிலவிடும் நிலையில், உள்ள கட்டணத்தை செலுத்தியே மாணவர்கள் கல்வி பயில முடியவில்லை என்றநிலை இருக்கும்போது, கட்டணத்தை மேலும் உயர்த்துவது, ஏழை மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலையும், பெற்றோர்களுக்கு அதிக சுமையுமாகவும் உள்ளது என்ற காரணத்தை எடுத்துக்காட்டி, உயர்த்தப்பட்ட கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று ஜெய்பூர் மாணவர்கள் கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

அவர்களின் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு ஆட்சியினர் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர்.

நேற்று பாடி சகாரி பகுதியில் உள்ள டென்சில் கட்டிடத்தின் முன் 200 மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனராம்.

ஆனால் அவர்கள்மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனராம். இதனால் ஆத்திரம் கொண்ட மாணவர்கள் கலைந்துசெல்ல மறுத்தனராம். உடனே போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மாணவர்களைப் பயமுறுத்தியுள்ளனராம்.

மாணவர்கள் கோரியது அதிகப்படுத்திய கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்பது; ஆனால், அவர்களுக்குக் காங்கிரஸ் ஆட்சியில் கிடைத்தது தடியடி! துப்பாக்கிப் பிரயோகம்!

மீண்டும் அணுகுண்டு வெடித்தது

நிவாடா, ஆக. 19—

அமெரிக்க அணுசக்திக் குழு நேற்று காலை 5 மணிக்கு மீண்டும் ஒரு அணுகுண்டை வெடித்துப் பரிசோதனை நடத்தியிருக்கிறது; அமெரிக்கா நடத்தும் பரிசோதனைகளில் இது 13-வது முறையாகும்.

இந்த குண்டு வெடிக்கப்பட்டதும் ஆரஞ்சுநிறமுள்ள ஒளி தோன்றி உடனே அது ஊதாவாக மாறி, சில வினாடிகளில் மறைந்ததாம்.

மிகக் குறைந்த சக்தியுள்ள இக்குண்டு 500 அடி உயரத்திலிருந்து வெடிக்கப்பட்டதாம். வெடித்ததும், ஏற்பட்ட புகைப்படலத்துக்கிடையே கதிரியக்கம் பற்றி ஆராய ஒரு 'பலூன்' அனுப்பப்பட்டதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.